தென்னிந்திய இசைக்கலைஞர்களால் இறைவன் மீது பாடப்பட்ட பக்திப் பாடல் தொகுப்பு

# "பக்திப் பாமாலை"




தொகுப்பாசிரியர்:

-மட்டுவிலூர்-

**தெ.திருவேரகன்**



வெளியீடு:

மட்டுவில் கிழக்கு மாகாளி அம்மன் திருவருட்கூடத்தின் ஆதரவுடன் இந்நூல் ஆசிரியரினாலேயே வெளியிடப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னிந்திய இசைக் கலைஞர்களால் இறைவன்
மீது பாடப்பட்ட பக்திப் பாடல்
தொகுப்பு

7/82

# "பக்திப் பாமாலை"



தொகுப்பாசிரியர்
-மட்டுவிலூர்-
தெ.திருவேரகன்

வெளியீடு:-
மட்டுவில் கிழக்கு மாகாளி அம்மன் திருவருட் கூடத்தின்
ஆதரவுடன் இந்நூல் ஆசிரியரினாலேயே
வெளியிடப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

இன்றைய நன்நாளிலே "பக்திப் பாமாலை" எனும் அரும் பெரும் நூலினை தொகுத்து வெளியிடுவதையிட்டு பெரு மகிழ்ச்சியடைவதோடு இந்நூல் வெளியீடு சிறப்புற எனது ஆசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சாவகச்சேரி இந்துவில் உயர்கல்வி பயிலும் மட்டுவில் தெய்வேந்திரன் திருவேரகன் அவர்கள் மாணவனாக இருந்துங் கூட சமயப் பணிக்காக தனது முயற்சியால் பிள்ளையார், அம்மன், முருகன் போன்ற கடவுளருக்குரிய பாடல்களைத் தொகுத்து வெளியிட முன் வந்துள்ளதை அறிந்து மகிழ்ச்சி அடைகின்றேன்.

எமதுசமயம், கலாச்சாரம் எங்கெங்கோ செல்கிறது. அதனை மாற்றி சைவசமயத்தவன் நல்ல வழியிலே செல்ல வேண்டும் எனும் நோக்கிலும் மட்டுவில் புதரன்கேணிவளவு மாகாளி அம்மன் திருவருட் கூடம் மேலும் வளர வேண்டும் எனும் நோக்கிலும் "பக்திப் பாமாலை" எனும் நூலை தொகுத்துள்ளார்.

சைவ சமயத்தவர்கள் அனைவரும் "பக்திப் பாமாலை" எனும் நூலை பெற்று பயனடைந்து அனைவரும் நீடூழி காலம் வாழ வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் கூறி இவ் வாசியுரையினை நிறைவு செய்து கொள்கின்றேன்.

"மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம்"

*01.09.2004* *"கிரியா சிரோமணி"*

*சிவஸ்ரீ ந.இராசேஸ்வரக் குருக்கள்*

*(சரசாலை தெற்கு மகிழ் நின்றவளவு இராமாவில் பிள்ளையார் ஆலய பிரதமகுரு)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அணிந்துரை

திரு.தெய்வேந்திரன் திருவேரகன் அவர்கள் ஆண்டில் மிக இளைஞராக இருப்பினும் தாய்மொழிப் பற்றும் இசைஞானமும் இயல்பாகவே கைவரப் பெற்றவர். இவரின் தந்தையார் அவர்களும் இவரைப் போன்றே கவித்திறன் வாய்ந்தவராக விளங்குவதோடு ஆங்கில தமிழ்ப் புலமையும் ஒருங்கே வாய்க்கப் பெற்றவர்.

இவர் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் க.பொ.த உயர்தர வகுப்பில் பயின்று கொண்டிருக்கிறார். இவருக்கு இருக்கும் சங்கீத ஞானத்தை உற்றுக் கவனித்த அடியேன் மட்டுவில் முத்துமாரி அம்மன் கோயிற் திருவிழாக் காலத்தில் இவரது சங்கீத அரங்கேற்றத்தை ஏதுவித ஆரவாரமுமின்றி நடாத்தி அதற்கூடாக மக்கள் அன்பையும் ஆதரவையும் பெறச் சந்தர்ப்பம் கிடைத்தது.

தற்போது மட்டுவில் புதரன் கேணிவளவில் குடி கொண்டுள்ள மாகாளி அம்மன் திருவருட் கூடத்தில் நடைபெற்று வரும் பஜனையில் முக்கியத்தவராக மிளிர்வதோடு பக்திப் பாக்களை எல்லோரும் வியக்கும்மளவிற்கு பாடிக் கொண்டே வருகிறார்.

சீர்காழி கோவிந்தராஜன், T.M.சௌந்தரராஜன், வீரமணி ஐயர் போன்ற இசைவல்லுனர் தம் பக்திப் பாக்களைத் தொகுத்து "பக்திப் பாமாலை" என்னும் நூலினை வெளியிடுகின்றார். பக்திப் பாக்களை வெளியிடும் இவரது கன்னி முயற்சி தமிழ் கூறும் நல்லுலகிற்கு மிகவும் பயன்படுவதாகவும் ஒரே வேளையில் எல்லோரும் ஒன்று கூடி இருந்து படித்து பயன்பெற வசதியாகவும் அமைகின்றது. மிகவும் இளம் பராயத்தில் இவரிடம் அமைந்திருக்கும் ஆன்மீக சிந்தனையைப் பாராட்டுவது நமது கடனாகும்.

மேலும் இவரது பணி சிறக்க எல்லாம் வல்ல பரம்பொருளை வேண்டி இச்சிறு உரையினை நிறைவு செய்கிறேன்.

*01.09.2004* — *திரு.ச.சின்னத்தம்பி*
*(ஓய்வு பெற்ற உதவிக்கல்விப் பணிப்பாளர்)*
*தென்மராட்சி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னுரை

"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"

இற்றைக்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு இலங்கையிலும் சரி அல்லது இந்தியா போன்ற வேறு நாடுகளிலும் சரி எங்கள் இந்துசமயம் பல இன்னல்களுக்கு மத்தியிலும் புத்துயிரோடு பொலிவுடன் பக்தி மயமாக அல்லது பக்தி மார்க்கமாக வளர்ந்து வந்தது. ஆனால் அது இன்றைய காலத்தில் விஞ்ஞான யுகத்தின் காரணமாக மாறி இந்துசமயம் அழிந்து போகும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. இங்கு விஞ்ஞான யுகம் என்று கூறியதற்குள் சினிமா, தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகை போன்ற சில செயற்பாடுகளைக் கூற முடியும். இதில் உதாரணமாக சினிமாவை நோக்கினால் ஆலயங்கள் இறைவனுக்கே உரியது. ஆனால் இன்று சினிமா நடிகர்களுக்கு ஆலயம் கட்டப்படுகின்றது. இதனால் எங்கள் இந்துசமயம் இழிவு படுத்தப்படுகின்றது. இது இனியும் எங்கள் சமுதாயத்தில் வளரவிட வேண்டியதொன்றல்ல.

வாழ்த்தவாயும், நினைக்கமட நெஞ்சும் தாழ்த்த சென்னியும் தந்த தலைவன் தாழ் வணங்கி அவனுடைய புகழ்கள் அனைத்தையும் வாயார வாழ்த்திப் பாடும் பொழுது எங்கள் அனைவருடைய உள்ளங்களும் உருகி இறைவன் மீது பக்தி வெள்ளத்தில் திழைக்கின்றது. இவ்வாறு இறைவனுடைய நாமங்களை புகழ்களை அல்லது அருளை வேண்டி வாழ்த்தி அமைகின்ற இப் "பக்திப்பாமாலை" எனும் பாடல் தொகுப்பை நீங்கள் யாவரும் பெற்று அதில் உள்ளவற்றை கற்று இவ்வுலகில் இன்புற வாழ வேண்டும் என்ற நோக்கிலேயும் மற்றும் திருவருட் கூட வளர்ச்சியையும் மையமாகக் கொண்டு இந்நூலை தொகுத்தளிக்கின்றேன்.

இந்நூலில் முற்றுமுழுதாக இந்திய பிரபல பாடகர்களால் இசைக்கப்பட்ட பக்திப் பாடல்களே தொகுத்தளிக்கப்படுகின்றது. ஒரு பாடல் மட்டும் எங்கள் யாழ் இணுவையூர் வீரமணி ஐயாவினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடப்பட்ட பாடலாகும். அதாவது "கற்பக வல்லியின் பொற்பதங்கள் பிடித்தேன் நற்கதியருள் வாயம்மா" என்ற அடியைக் கொண்டமைந்த பாடலாகும். இப்பாடலின் புதுமைகளை நோக்கின் இந்தியாவில் வீற்றிருக்கின்ற இறைவி கற்பக வல்லி மீது பாடப்பட்டது. அடுத்த அம்சம் இந்தியாவின் புகழ்பூத்த பாடகர் ஒருவரினால் இப்பாடலுக்கு இசையமைக்கப்பட்டது. மற்றும் இந்நூல் தொகுப்பில் தேவாரத் தொகுப்பையும் தொகுத்திருக்கின்றேன்.

இந்நூல் தொகுப்பில் பக்தி பரவசம் தான் முற்று முழுதாக காணப்படுகின்றது. பக்தியோடு இறைவனை வேண்டி இறைஞ்சி பாடுவன யாவும் தேவாரம் அல்லது பக்திப் பாடலாகும். ஆகவே இதற்கு பொருத்தப்பாடாக "பக்திப்பாமாலை" எனும் பெயரைச் சூட்டி இந்நூலை தொகுத்தளிக்கின்றேன். இந்நூல் தொகுப்பிற்கு காரண கர்த்தாக்களாக உள்ள மட்டுவில் கிழக்கு புதரன் கேணிவளவு மாகாளி அம்மன் திருவருட் கூடத்திற்கு முதற்கண் எனது நன்றியை தெவிவித்து அடுத்து இந்நூலை வெளியிட ஆசியுரை, அணிந்துரை, வாழ்த்துரைகள், அன்பளிப்புக்கள் வழங்கிய பெரியோருக்கும், இந்நூலை உரியமுறையில் அச்சிட்டு தந்த சங்கத்தானை நியூ அருண் பிரிண்டேர்ஸ் நிறுவனத்திற்கும் மற்றும் சகல வழிகளிலுமுதவிய எனது அன்பான பெற்றோர், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எனது நன்றியை சிரம் தாழ்த்தி தெரிவித்துக் கொண்டு எல்லாம் வல்ல அடியேனுடைய குல தெய்வமாகிய மாகாளி அம்மன் திருவடிகளில் இவ் "பக்திப் பாமாலை" எனும் நூலை சூட்டுகின்றேன்.

என்றும் இறைவன் தாழ் வணங்கும்.

*அன்பன்*

*மட்டுவிலூர்*

*தெ.திருவேரகன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துரை

இசைக்கு மயங்காதார் யாருமில்லை எனலாம். அதுவும் பக்திப் பாடல்களை இசையுடன் பாடும் பொழுது பாலர் தொடக்கம் முதியோர்வரை மெய் மறந்து இரசிப்பார். பக்திப் பாடல்கள் மனதைத் தூய்மைப்படுத்தும், இறை ஞானத்தைக் கொடுக்கும் மாணவர்களை நல்வழிப்படுத்தும்.

அத்தகைய பக்திப் பாடல்களை தொகுத்து யாவருக்கும் இலகுவில் கிடைக்கச் செய்வது சிறந்த நற்பணியாகும். விநாயகர், முருகன், கண்ணன், சக்தி ஆகிய கடவுளர் மேல் பாடப்பட்ட சிறந்த பாடல்களைத் தொகுத்துப் "பக்திப் பாமாலை" என்ற தலைப்பில் வெளியிடுவது பாராட்டுதற்குரியது.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் தரம் பதின்மூன்றில் கல்வி கற்கும் மாணவனான தெ.திருவேரகன் அத்தகைய பணியைச் செய்துள்ளார். சங்கீதத்தை ஒரு பாடமாக கற்கும் செல்வன் தெ..திருவேரகன் தான் பெற்ற பக்த்திப் பரவசத்தை ஏனையோரும் பெறவேண்டும் என்ற நன் நோக்குடன் இப்பாடல் தொகுப்பை வெளியிடுகின்றார்.

அத்தகைய ஆர்வம் தான் அவரைப் படிப்படியாக இன்னும்பல நூல்களை வெளியிட்டு இளைஞர் சமுதாயத்தை முன்னேற்ற வைக்கும் என நம்புகின்றேன். இப்பாடல் தொகுதியில் இடம்பெற்ற பாடல்கள் அனைத்தும் யாவராலும் விரும்பிப் பாடக் கூடியவை.

செல்வன் தெ.திருவேரகனுடைய பணி இத்துடன் நின்றுவிடாது மேன்மேலும் வளரவேண்டும் என்று ஆசி கூறுகின்றேன்.

செல்வி.சி.கணபதிப்பிள்ளை
(உதவிக்கல்விப் பணிப்பாளர், தமிழ்)
கண்டி வலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவருட்கூட தர்மகர்த்தாவின் அருளாசியுரை

பக்தி என்பது அன்பின் ஒருவடிவம். நாம் இறைவன் மீது வைக்கும் அன்பின் வடிவமே பக்தி என்று சொல்லப்படுகின்றது. அன்பின் மேலீட்டால் இறைவன் மீது பாடப்பட்டபாடல்களே பக்திப்பாடல்கள் பக்தி மயமான இறைமயமான இப்பாடல்கள் கலியுககாலமாகிய இக்காலத்தில் அருகிச் செல்வது கண்கூடு. அதிலும் ஏட்டிலோ எழுத்திலோ இப்பாடல்களைக் காண்பது மிகவும் அரிது. இதனைக் காலத்தின் தேவையாக உணர்ந்து வயதிலும், தோற்றத்திலும் சிறுவனாக இருந்தாலும் ஆற்றலிலும், ஆளுமையிலும், அறிவிலும் மேலானவனான ஒரு இசைக் கலைஞன் செல்வன். தெ.திருவேரகன் இப்பாடல்களைத் தேடி திரட்டி தொகுத்து "பக்திப்பாமாலை" எனும் நூலாக வெளியிடுவது பாராட்டிற்குரியது.

செல்வன் தெ.திருவேரகன் எமது திருவருட்கூட பஜனைக் குழுவின் ஒரு முக்கிய கதாநாயகன் இவருடைய இசைக்கு எம் பெருமாட்டி மயங்குவதோடு ஆனந்தத்தில் திழைப்பதை நாம் எல்லோரும் காண்கின்றோம். இக்காலத்தில் எமது திருவருட் கூடத்தில் இருக்கும் பிரார்த்தனைக் குழுவானது இக்காலத்தின் ஒரு மைல்கல்லாக கூட வியக்கக்கூடிய ஆளுமையோடு இருப்பது பெருமைக்குரியது. இதனைச் சிறப்பாகக் கொண்டு இயக்கும் பிரார்த்தனைக் குழுவுக்கு இச் சந்தர்ப்பத்தில் நன்றி கூறுவதில் மகிழ்வடைகின்றேன்.

இன்று திருவேரகன் செய்யும் இச் செயற்பாட்டுக்கு திருவருட்கூடம் வித்திட்டது என்றால் அது மிகையாகாது. எனினும் எல்லாவற்றுக்கும் மேலானதும் மாகாளித்தாயினுடைய அருள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகாளித்தாயின் மீது கொண்டபக்தியின் மேலீட்டால் தாயினுடைய திருவருட்கூட வளர்ச்சியைக் கருத்திற் கொண்டு திருவேரகன் வெளியீடு செய்யும் பக்திப் பாமாலைக்கு ஆசி கூறுவதோடு அவருடைய பணி மேலும் தொடர வாழ்த்தி கண்ணகி பரந்தாமனுடன் உடன் உறையும் மாகாளித்தாயின் ஆசியையும் அருளையும் வேண்டி நிறைவு செய்கிறேன்.

அன்னையின் அருளோடு வாழ்க பணி

*மாகாளி அம்மன் திருவருட் கூடம்,*
*புதரன் கேணி வளவு,*
*மட்டுவில் கிழக்கு,*
*சாவகச்சேரி.*

*திரு.க.கணேசலிங்கம்*
*தர்மகர்த்தா*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுறைத் தொகுப்பு

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றினை
நந்தி மகன் தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்து அடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

தோடுடைய செவியன் விடை ஏறி ஓர்
தூவெண் மதி சூடிக்
காடுடைய சுடலைப் பொடி பூசி என்
உள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட் பணிந்து
ஏத்த அருள் செய்த
பீடுடைய பிரமா புரமேவிய
பெம்மான் இவனன்றே.

சொற்றுணை வேதியன் சோதிவானவன்
பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணையாவது நமச்சி வாயவே.

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவ பெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கழுந்தருளு வதினியே

பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயால் மறைபோலும் காணேடீ
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவும் கொண்டென்னை
ஈசன் அவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திறள் மணிக்குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலங் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயை
தொண்டனேன் விளம்புமா விளம்பே

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றம் எம் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டு உள்ளம்
குளிர என் கண் குளிர்ந்தனவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப் பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன் மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணன் வாழ்கின்ற சிற்றம்பலமே இடமாக
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

மன்னுக தில்லை வளர்க நம்பக்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னிற் செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனி எல்லாம் விளங்கி
அன்ன நடை மடவாள் உமை கோன்
அடியோமுக்கு அருள் புரிந்து
பின்னைப் பிறவியறுக்க நெறிதந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

ஆறிரு தடந்தோள் வாழ்க ஆறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்சை வாழ்க யானைதன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க சீர் அடியார் எல்லாம்

கற்பனைக் கடந்த சோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோலம் நீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பா வியோமமாகும் திருச்சிற்றம்பலத்துள் நின்று
பொற்புடன் நடம் செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி.

## திருப்புகழ்

ஏறுமயில் ஏறி விளையாடும் முகம் ஒன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறும் அடியார்கள் வினை தீர்க்குமுகம் ஒன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்ற முகம் ஒன்றே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறுபடு சூரரை வதைத்த முகம் ஒன்றே
வள்ளியை மணம்புணர வந்த முகம் ஒன்றே
ஆறுமுகமான பொருள் நீயருளல் வேண்டும
ஆதி அருணாசலம் அமர்ந்த பெருமாளே.

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தரன் மாறெனப் பெருவாழவின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணர் நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றி வேலாயுதப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலி வளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகம் எல்லாம்.

## பொது

கல்லாப்பிழையுங் கருதாப் பிழையும் கசிந்துருகி
நில்லாப்பிழையும் நினையாப் பிழையும் — நின்
ஐந்தெழுத்தைச் சொல்லாப் பிழையும்
துதியாப் பிழையுந் தொழாப்பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய் கச்சியே அப்பனே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிள்ளையார் பாடல்கள்



01

கணநாதன் புகழ் பாடும் கீதம்
கணநாதன் புகழ் பாடும் கீதம்
அந்த கணபதி அருள்தானே இசைக்கான நாதம்
(கணநாதன்)
(அந்த)
(கணநாதன்)

உயிராலே இசைமீட்டி ஓம் என்ற சுரம் காட்டி
மயிர் நேசக் கணபதியை தினம் பாடினேன்
(உயிராலே)
(மயிர்நேச)

அயராத மனங் கொண்டு அதன் மூலம் பகை வென்று
புவிமீது உனைக் கொண்டு புகழ் தேடினேன்
(அயராத)
(புவிமீது)

பக்தி எனும் விளக்கில் வரும் சக்தி எனும் ஒளியே
பக்தி எனும் விளக்கில் வரும் சக்தி எனும் ஒளியே
இதை வித்தை அத்தனையும் நித்தம் கற்றுக் தரும்
உனக்கும் எனக்கும் மணக்கும் உறவினை
(கணநாதன்)
(அந்த)
(கணநாதன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவேலன் விளையாட மயில் ஒன்றைப் பரிசாக்கி
இதமாக இளையோனின் மனம் தேற்றினாய்.

(வடிவேலன்)
(இதமாக)

உமையாளும் சிவானரும் உறவாட சுகம் தேட
மனதாலே உருவாக்கி நீ காட்டினாய்
கற்ற வித்தை வளர அதில் வெற்றி வந்து மலர
கற்ற வித்தை வளர அதில் வெற்றி வந்து மலர
உனைப் பற்றிக் கொண்ட எனும் சுற்றி வந்து - தினம்
வணங்கும் இணங்கும் மனங்கள் தினம் தினம்

(கணநாதன்)
(அந்த)
(கணநாதன்)

வினை தீர்க்கும் நாயகனே விநாயகனே - நல்ல
வினை தீர்க்கும் நாயகனே விநாயகனே
குணம் தந்து காத்திடுவாய் கணேசனே
குணம் தந்து காத்திடுவாய் கணேசனே

(வினை)

எங்கும் இருப்பான் அவன் ஏகாந்தம் ஆனவன்
முந்தி நிற்பான் அவன் ஆனை முகமானவன்

(எங்கும்)

வேண்டிக் கொண்டோர்க்கும்
பாடிப் பணிந்தோர்க்கும் திருவடி அருளும்

(வேண்டி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னாலே வாழ்வோர்க்கு துன்பங்கள் இல்லையே
உன்னாலே வாழ்வோர்க்கு துன்பங்கள் இல்லையே
(வினை)

எளிமையானவன் அவன் யாவர்க்கும் அருள்பவன்
மகிமையானவன் அவன் மேலோர்க்கும் ஞாதவன்
7182 (எளிமை)

சொல்லின் முதல்வனே செல்வ புதல்வனே
சித்தி கணேசனே மலரடி சரணம்
(சொல்லின்)

கண்ணாலே காண்போர்க்கு தோல்விகள் இல்லையே
கண்ணாலே காண்போர்க்கு தோல்விகள் இல்லையே
(வினை)
(நல்ல)
(வினை)

03

சித்திரச் சோலையிலே உனை நான்
சேவித்த வேளையிலே
சித்திரச் சோலையிலே உனை நான்
சேவித்த வேளையிலே
வேதியன் போல வந்தாய் வந்து என்
வேண்டுதல் ஏற்றுக் கொண்டாய்
வேதியன் போல வந்தாய் வந்து என்
வேண்டுதல் ஏற்றுக் கொண்டாய்
ஆனை முகத்தோனே எனை ஆளும் கணபதியே
ஆனை முகத்தோனே எனை ஆளும் கணபதியே
(சித்திர)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்த்தக் கரைதனிலே - காதல்
தேவியை தேடையிலே
மூத்த குமரியைப் போல் நீதான்
புன்னகை வீசிச் சென்றாய்

(தீர்த்த)

நேற்று நடந்ததெல்லாம் எனது
நெஞ்சில் இனிக்குதையா
சித்திரச் சோலையிலே உனை நான்
சேவித்த வேளையிலே
வேதியன் போல வந்தாய் வந்து என்
வேண்டுதல் ஏற்றுக் கொண்டாய்
ஆனை முகத் தோனே எனை ஆளும் கணபதியே

(சித்திர)

வாழ்க்கை துணை வேண்டி உனை நான்
வாய்விட்டுக் கேட்டதிலே
திருமகள் வடிவான எனக்கோர்
மனைவியை நீ கொடுத்தாய்

குருவே நீதானே எனக்கு
குழந்தையை அவதரித்தாய்
குருவே நீதானே எனக்கு
குழந்தையை அவதரித்தாய்
சித்திரச் சோலையிலே உனை நான்
வேதியன் போல வந்தாய் வந்து என்
வேண்டுதல் ஏற்றுக் கொண்டாய்
ஆனை முகத் தோனே எனை ஆளும் கணபதியே

(சித்திர)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04

விநாயகனே வினை தீர்ப்பவனே
வேழமுகத்தோனே ஞான முதல்வனே
(விநாயகனே)

குணா நிதியே குருவே சரணம்
குணா நிதியே குருவே சரணம்
குறைகள் அகல இதுவே தருணம்
குணா நிதியே குருவே சரணம்
குறைகள் அகல இதுவே தருணம்
(விநாயகனே)

உமாபதியே உலகம் என்றாய்
ஒரு சுற்றினிலே வலமும் வந்தாய்
கண நாதனின் மாங்கனியை உண்டாய்
கதிர் வேலவனின் கருத்தில் நின்றாய்
(விநாயகனே)

05

பிள்ளையார் சுழி போட்டு நீ நல்லதை தொடங்கிவிடு
வள்ளலாம் கணபதியின் நல்லாசியும் அருளும் கிடைத்துவிடும்
(பிள்ளையார்)

ஊர்தோறும் குளத்தடியில் நம் கணபதி அமர்ந்திருப்பான்
ஒவ்வொரு மனிதனும் நல்உள்ளத்திலும் குடியிருப்பான்
எல்லோரும் நலம் காண எண்ணுகின்ற மனிதருக்கு
எந்நாளும் விநாயகனின் திருவருள் துணையிருக்கும்
தினம் தினம் மனந்துதிக்கும்
அவன் அருள் நலம் சேர்க்கும்
(பிள்ளையார்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோர்க்கு மேலான உலகம் இல்லை என்றால்
கற்றோர்க்கு மேலாக பெரியோர் இல்லை என்றால்
நற்றன விநாயகனை நாளும் தொழும் போது
அர்த்தம் புரிந்துவிடும் திருவருள் துணையிருக்கும்
தினம் தினம் மனந் துதிக்கும்
அவன் அருள் நலம் சேர்க்கும்

(பிள்ளையார்)

ஒரு நாளில் ஒருவேளை ஐங்கரனை நினைத்து விடு
உயிர்கள் யாவும் உந்தனது சொந்தமென வருந்தி விடு
நீயும் இன்று வாழ்ந்து விடு பிறரையும் வாழவிடு
இந்த எண்ணம் உனக்கிருந்தால்....
திருவருள் துணையிருக்கும்
தினம் தினம் மனந்துதிக்கும்
அவன் அருள் நலம் சேர்க்கும்...

(பிள்ளையார்)

06

பிள்ளையாரின் சுழிபோட்டு நல்ல தெல்லாம் தொடங்கு
வெள்ளவத்தை ஐங்கரனை வேண்டிவந்து வணங்கு
கேட்டதெல்லாம் கிடைக்கும்
நினைத்ததெல்லாம் நடக்கும்

(பிள்ளையாரின்)

பஞ்ச பூதம் அனைத்தையுமே அடக்கி ஆழலே
ஐந்து கரம் கொண்டே வடி வெடுத்தாரே
மகா பாரதக் கதையை வியாசர் கூறவே
தன் தந்தத்தையே ஒடிந்து எழுதி வைத்தாரே

(பிள்ளையாரின்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுகம் புல்லாய் அவரையே அர்ச்சனை செய்தால்
அடியார்க் கெல்லாம் அவர் அருள் புரிவாரே
மரத்தடியில் குளத்தடியில் அமர்ந்திருப்பாரே
தன் மக்களுக்கு வாழ்வினிலே துணையிருப்பாரே

கணங்கள் அனைத்துக்குமே அதிபதியாகி
கணபதி என்றே பெயரெடுத்தாரே.

7182

(பிள்ளையாரின்)

07

உச்சிப் பிள்ளையார் கோயில் கொண்ட இடம்
திருச்சி மலையினிலே - நம்
அச்சம் நீங்கவும் ஆனந்தம் பெருகவும்
அமர்ந்தார் மனதினிலே

(உச்சி)

சச்சிதானந்த சற்குருவாகிய நிமலன் - புதிர்
தந்தையான பின் தாயுமானதிரு நாசன்
அச்சுதன் மனம் அன்பினால் மகிழ் மருகன்
எங்கள் ஆனைமுகம் கொண்ட
ஆதி நாதனாம் இறைவன்

(உச்சி)

பாடுதலும் அடிபரவுதலும் தொழிலாகும்
உனை நாடுதலும் அருள் நன்னுதலும் நினைவாகும்
கூடுதலும் கரம் கூப்புதலும் நம தெண்ணம்
கூடுதலும் கரம் கூப்புதலும் நம தெண்ணம்
வினை ஓடுதலும் பகை ஒருங்குதலும் இனித்திண்ணம்

(உச்சி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகன் பாடல்கள்



08

கற்பனை என்றாலும் கற்சிலை என்றாலும்
கற்பனை என்றாலும் கற்சிலை என்றாலும்
கந்தனே உனை மறவேன் - நீ
கற்பனை என்றாலும் கற்சிலை என்றாலும்
கந்தனே உனை மறவேன்

அற்புதமாகிய அருட் பெரும் சுடரே
அற்புதமாகிய அருட் பெரும் சுடரே
அற்புமாகிய அருட் பெரும் சுடரே
[illegible] தேடிடும் கருணையின் கடலே
[illegible] தேடிடும் கருணையின் கடலே

(கற்பனை)

நிற்பதும் நடப்பதும் நின் செயலாலே
நிற்பதும் நடப்பதும் நின் செயலாலே
நினைப்பதும் நிகழ்வதும் நின் செயலாலே
நினைப்பதும் நிகழ்வதும் நின் செயலாலே
கற்ப தெல்லாம் உந்தன் கனி மொழியாலே
கற்ப தெல்லாம் உந்தன் கனி மொழியாலே
காண்பதெல்லாம் உந்தன் கண் விழியாலே
காண்பதெல்லாம் உந்தன் கண் விழியாலே

(கற்பனை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09

முதல் வணக்கம் எங்கள் முருகனுக்கே
முன்னின்று காக்கும் இறைவனுக்கே
புகழ்மணக்கும் அவன் பெயர் சொன்னால்
பூச் சொரிந்தே மனம் பாடிவரும்

சிம்மாசனம் போன்ற மயிலாசனம்
செங்கோலில் அவன் செய்யும் சிரிக்கின்றதே
அடியார்தம் இதயங்கள் குடிமக்களே
அருளாட்சி எல்லாமே அவனாட்சியே

முதற் சங்கம் உருவாக மொழியானவன்
இடைச்சங்கம் கவிபாட புகழானவன்
கடைச்சங்கம் வாழ்வுக்கும் வழியானவன்
கடல் கொண்டு அழியாத தமிழானவன்

10

அருள் தரு சரவண பவனெனும் முருகனின்
அடியினைப் பணிமனமே
(அருள்தரு)

பொருள்பல பெருகிடும் அறநெறி
வளர்ந்திடும் புவியினின் அனுதினமே
(பொருள்)

இருளது விலகிடும் ஒளியது பரவிடும்
இறைவனின் மகன் செயலால்
(இருளது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவது விளங்கிடும் புரிவது துலங்கிடும்
குருபரன் குகன் தயவால்
வருவது விளங்கிடும் புரிவது துலங்கிடும்
குருபரன் குகன் தயவால்

(அருள்)

தொழில்வளம் கலைவளம் மொழிவளம்
உயர்ந்திட துணையது புரிந்திடுவான்

(தொழில்)

எழிலுடன் குலவழி தழைத்திட
மனமதில் இனிமையைப் பொழிந்திடுவான்
எழிலுடன் குலவழி தழைத்திட
குமரன் இனிமையைப் பொழிந்திடுவான்

இகபரசுகமுடன் புகலறும்
புகழெனும் பெருநிதி வழங்கிடுவான்

(இகபற)

மகவொடும் மனை யொடும்
சுகமது சுகமுறு வகையினில் இயங்கிடுவான்
மகவொடும் மனை யொடும்
சுகமது சுகமுறு வகையினில் இயங்கிடுவான்

(அருள்)

11

உள்ளம் உருகுதையா - முருகா
உன்னடி காண்கையிலே

(உள்ளம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அள்ளி அணைத்திடவே
அள்ளி அணைத்திடவே - எனக்குள்
ஆசை பெருகுதப்பா.... முருகா
(உள்ளம்)

பாடிப் பரவசமாய் உன்னையே
பார்த்திடத் தோன்றுதையா } 3தரம்

ஆடும் மயிலேறி முருகா
ஓடி வருவாயப்பா } 3 தரம்
(உள்ளம்)

பாசம் அகன்றதையா - பந்த
பாசம் அகன்றதையா
உந்தன் மேல் நேசம் வளர்ந்ததை
ஈசன் திருமகனே - எந்தன்
ஈசன் திருமகனே
ஈனம் மறைந்ததப்பா
(உள்ளம்)

ஆறுதிருமுகமும் அருளை வாரி வழங்குதையா
உன் அருளை வாரி வழங்குதையா
வீரமிகுந் தோளும் கடம்பம்
வெற்றிமுழங்குதப்பா ...
(உள்ளம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்கண்ட தெய்வமய்யா
நீயிந்த கலியுக வரதனையா
பாவி என்றிகழாமல் எனக்கும்
பதமலர் தருவாய்யய்யா ..

(உள்ளம்)

12

சரவணப் பொய்கையில் நீராடி - துணை
தந்தருள் என்றேன் முருகனிடம்
இருகரம் நீட்டி வரம் கேட்டேன் - அந்த
மன்னவன் நின்னருள் மலர் தந்தான்

(சரவண)

அவனிடம் சொன்னேன் என் அஞ்சுதலை
அந்த் அண்ணனே தந்து வைத்தான் ஆறுதலை
இவ்விடம் இவன் கொண்ட இன்பநிலை கண்டு
என்னிடம் நான் கண்டேன் மாறுதலை
ஓ.. ஓ.. ஓ...

(சரவண)

நல்லவர் என்றும் நல்லவரே - உள்ளம்
உள்ளவர் யாவரும் உள்ளவரே
நல்ல இடம் நான் தேடி வந்தேன் - அந்த
நாயகன் என்னுடன் கூடவந்தான்
ஓ.. ஓ.. ஓ..

(சரவண)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13

அதிகாலையிலே அலை ஓசையிலே
உந்தன் ஓம் எனும் மந்திரம் கேட்கிறதே
(அதிகாலை)

ஒரு கோடியின்பம் உருவாகுமென்று
ஒரு கோடியின்பம் உருவாகுமென்று
உனைத் தொழுதாலே அழகே
(அதிகாலை)

ஆயிரம் தெய்வங்கள் அவனியில் இருந்தாலும்
தாயெனவருவது உன் வேல் தானே
ஆயிரம் ஔடதங்கள் உடலினைக் காத்தாலும்
உயிரினைக் காப்பது உன்வேல் தானே
முருகா உனை நான் மறவேன் மறவேன்
குமரா அழகா எனைக் காப்பவனே
(அதிகாலை)

ஆதியில் கருவோரு ஆணவம் வளர்ந்தோங்க
மீதியாலே இருப்பதென்ன மண்தானே
நற்றமிழ் சொன்னவனின் நெற்றியில் திருநீறு
சொல்லிடும் தத்துவமும் இது தானே
மறை ஆண்டவனே மறை ஆழ்பவனே
குறையேதினியேல் சரணா கதியே
(அதிகாலை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுட்ட பழமும் நீ சுடாத பழமும் நீ
பட்ட மரங்களையும் தளைத்திட வைப்பாய்
முருகா அழகா மெய்யப்பனீன்ற
முருக சரவண பவகுக

(சுட்ட பழம்)

ஔவைப் பாட்டிக்கு நாவல் பழம் தந்து
ஔவைப் பாடடிக்கு நாவல் பழம் தந்து
தான் என்ற அகந்தையாலே ஆணவம்
கொண்டவர்க்கு
தான் என்ற அகந்தையாலே ஆணவன்
கொண்டவர்க்கு

சுட்ட பழத்தாலே அறிவுரை சொன்னாயே
சுட்ட பழத்தாலே அறிவுரை சொன்னாயே
தரணியில் மாந்தருக்கும் புரிந்திட வைத்தாயே
தரணியில் மாந்தருக்கும் புரிந்திட வைத்தாயே

(சுட்ட பழம்)

செல்வச் செருக்கும் கல்விச் செருக்கும்
செல்வச் செருக்கும் கல்விச் செருக்கும்
பட்டச் செருக்கும் பதவிச் செருக்குமே
பட்டச் செருக்கும் பதவிச் செருக்குமே
எவருக்குமே இனி வைத்திட வேண்டாமே
எவருக்குமே இனி வைத்திட வேண்டாமே
மாமணியே முருகா சரவண பவகுக

(சுட்ட பழம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசை நீக்கி பெரியோரை மதித்து
பேராசை நீக்கி பெரியோரை மதித்து
குறை குடமாகாமல் நிறைகுடமாய் திகழ
குறை குடமாகாமல் நிறைகுடமாய் திகழ
இருக்கும் வரைக்குமே இறைவன் தாழ் சரணம்
இருக்கும் வரைக்குமே இறைவன் தாழ் சரணம்
எண்ணி இருப்போர்க்கு வரமருள்வாய்
எண்ணி இருப்போர்க்கு வர மருள் வாய்
முருகா அழகா மெய்யப்பனீன்ற
முருக சரவண பவகுக

(சுட்டி பழம்)

15

முருகா நீ வரவேண்டும் முருகா - நான்
நினைத்த போது நீ வரவேண்டும்
முருகா நீ வரவேண்டும்

நினைத்த போது நீ வரவேண்டும்
நீல எழில் மயில் மேலமர் வேலா

(நினைத்த)

உனையே நினைந்து உருகுகின் றேனே
உனையே நினைந்து உருகுகின் றேனே
உணர்ந்திடும் அடியார் உள்ளம் உறைவோனே
உணர்ந்திடும் அடியார் உள்ளம் உறைவோனே

(நினைத்த)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலியுகத் தெய்வம் கந்தா நீயே
கருணையின் விளக்கமும் கடம்பா நீயே

(கலியுக)

மலையெனத் துயர்கள் வளர்ந்திடும் போதில்
மலையெனத் துயர்கள் வளர்ந்திடும் போதில்
மாயோன் மருகா முருகா
மயோன் மருகா முருகா - என்றும்
நினைத்த போது நீ வரவேண்டும்
நீல எழில் மயில் மேலமர் வேலா

(நினைத்த)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணன் பாடல்கள்



16.

புல்லாங்குழல் கொடுத்த மூங்கில்களே - எங்கள்
புருசோர்த்தமன் புகழ் பாடுங்களே
வண்டாமும் கங்கை மலர்த் தோட்டங்களே
எங்கள் மதிசூத நன்புகழ் பாடுங்களே
(புல்லாங்குழல்)

பன்னீர் மலர்ச் சொரியும் மேகங்களே
எங்கள் பரந்தாமன் மெய் அழகைப் பாடுங்களே
தென் கோடி தென்றல் வரும் ராகங்களே - எங்கள்
ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தி புகழ் பாடுங்களே.
(புல்லாங்குழல்)

குருவாயூர் தன்னிலவன் தவழ்கின்றவன்
ஒரு கொடியோடு மதுராவை ஆழ்கின்றவன்
திருவேங்கரத்தில் அவன் அருள்கின்றவன் - அந்த
ஸ்ரீரங்கம் திருப்பள்ளி கொள்கின்றவன்.
(புல்லாங்குழல்)

பஞ்சாலி புகழ்காக்க தன்கை கொடுத்தான்
அன்று பாரதப் போர் முடிக்க சங்கை எடுத்தான்
பாண்வர்க்கே உரிமையுள்ள சங்கை கொடுத்தான்
நாம் படிப்பதற்கு கீதை எனும் பாடம் கொடுத்தான்.
(புல்லாங்குழல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17.

ஆயர் பாடி மாளிகையில் தாய்மடியில் கன்றினைப் போல்
மாயக்கண்ணன் தூங்குகின்றான் தாலேலோ
அவன் வாய் நிறைய மண்ணை உண்டு
மணடலத்தைக் காட்டிய பின்
ஓய் வெடுத்து தூங்குகின்றான் ஆராரோ

(ஆயர்பாடி)

பின்னலிட்ட கோபியரின் கன்னத்திலே கன்னமிட்டு
மன்வன் போல் லீலை செய்தான் தாலேலோ
அந்த மந்திரத்தில் அவனுறங்க மயக்கத்திலே இவனுறங்க
மண்டலமே உறங்குதம்மா ஆராரோ

(ஆயர்பாடி)

நாகபடம் மீதிலவன் நர்த்தனங்கள் ஆடியபின்
தாக மெல்லாம் தீர்த்துக் கொண்டான் தாலேலோ
அவன் மேகநிலை கூடஒரு யோகநிலை போலிருக்கும்
யாரவனை தூங்க விட்டான் ஆராரோ

(ஆயர்பாடி)

கண்ணன் அவன் தூங்கிவட்டான் - காசினிலே
தூங்கிவிடும் அன்னையரே துயில் எழுப்ப வாரீரோ
அவன் பெண் அழகைப் பார்ப்பதற்கும் போதைமுத்தம்
தருவதற்கும்
கன்னியரே கோபியரே வாரீரோ.

(ஆயர்பாடி).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18

அலைபாயுதே கண்ணா என்மனம் - மிக அலைபாயுதே
உன் ஆனந்த மோகன வேணுகானமதில்
(அலைபாயுதே)

நிலை பெயராது சிலை போலவே நின்று நேரமாவதறியாமலே
மிக வினோதமான முரளீதரா
(அலைபாயுதே)

தெளித்த நிலவு பட்டப்பகல் போல் தெரியுதே
திக்கை நோக்கி என் இருபுருவம் தெரியுதே
கனிந்த உன் வேணுகானம் காற்றில் வருகுதே
கண்கள் சொருகி ஒரு விதமாய் வருகுதே
கதித்த மனத்தில் உருக்கி பதத்தை
எனக்கு அளித்து மகிழவா - ஒரு
தனித்த வனத்தில் அழைத்து எனக்கு
உணர்ச்சி கொடுத்து முகிழ்த்த வா

அலைகடல் அலையினில் கதிரவன் ஒளியென
இணையரு கழலெனக் களிக்க வா
கதறி மனமுருகிறானழைக்க வா
இதர மாதருடன் நீ களிக்க வா
இது தகுமோ இதுமுறையோ
இது தர்மம் தானோ - குழல்
ஊதிடும் போது ஆடிடும் குழைகள் போலவே
மனது தேவனை மிகவொறா
(அலைபாயுதே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



19

தாமரைப் பூவில் அமர்ந்தவளே - செந்
தாமரைப் பூவில் அமர்ந்தவளே
செந்தூரத் திலகம் அணிந்தவளே

(தாமரை)

சிந்தையில் நின்றாடும் நாதன் என்
நெஞ்சினில் நிறைந்தவளே கருணையில் சிறந்தவளே
நிறைந்தவளே கருணையில் சிறந்தவளே
செந் தாமரைப் பூவில் அமர்ந்தவளே

சுந்தரி பார்வதி பாமகளும்
சொந்தமுடன் நினைக்கும் பூமகளே
உன்பதம் எந்நாளும் தஞ்சம் திருமகளே
அன்பர்களைக் காட்டிடும் அலை மகளே

(செந்)

அலைகடலில் உதித்த ஆதிலக்சுமி தாயே
அமரர்கள் துதிபாடும் அந்தமும் நீயே

(அலை)

செல்வங்கள் பெருகும் உந்தன் திருவருள் துணையாலே
செல்வங்கள் பெருகும் உந்தன் திருவருள் துணையாலே
உலக மெல்லாம் உயரும் உன்னருள் மனதாலே

(தாமரை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20

ஆதிலக்சுமி தேவிக்கு அழகாய் விளக்கேற்றி
பஞ்சத்திரிபோட்டு பசும் நெய்தனை ஊற்றி
குங்குமத்தில் பொட்டிட்டு கோலமஞ்சள் தானமிட்டு
பூமாலை சூடி வைத்து பூஜிப்போம் உன்னை - திருமகளே...

திருவிளக்கை ஏற்றிவைத்தோம் திருமகளே வருக
குலம் விளங்க எங்கள் வீட்டில் கொலுவிருக்க வருக
அலை மகளே வருக ஐஸ்வரியம் தருக
அலை மகளே வருக ஐஸ்வரியம் தருக

(திருவிளக்கை)

வாசலிலே மாக்கோலம் வீட்டினிலே லக்சுமி கரம்
வாசலிலே மாக்கோலம் வீட்டினிலே லக்சுமி கரம்
நெற்றியிலே திரிசூலம் நெஞ்சினிலே லக்சுமி கரம்
அம்மா நீ ஆதரித்தால் அகில மெல்லாம் இன்பமயம்
அஷ்டமா சித்தியுடன் லோக மேல்லாம் சேமமயம்
அஷ்டமா சித்தியுடன் லோக மேல்லாம் சேம மயம்
அலை மகளே வருக ஐஸ்வரியம் தருக
அலை மகளே வருக ஐஸ்வரியம் தருகு

மாவிலையும் தோரணமும் மங்கலத்தின் அடையாளம்
மாவிலையும் தோரணமும் மங்கலத்தின் அடையாளம்
ஊதுபத்தி எரிவதனால் உள்ளத்திலும் ஒருவாசம்
அம்மா நீ அருள் புரிந்தால் அகிலமெல்லாம் அலங்காரம்
அன்றாடம் பாடிடுவோம் அஷ்டலக்சும் திருநாமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கு சக்ரதாரி நமஸ்காரம்
சகலவரம் தருவாய் நமஸ்காரம்
பத்மவீக தேவி நமஸ்காரம்
பக்தர் தமைக் காப்பாய் நமஸ்காரம்
(திருவிளக்கை)

21

கற்பக வல்லி நின் பொற்பதங்கள் பிடித்தேன்
நற்கதியருள் வாய்ம்மா
(கற்பக வல்லி)

பற்பலரும் போற்றும் பதிமையிலாப் புரியில்
சிற்பம் நிறைந்த உயர் சிங்காரக் கோயில் கொண்ட
(கற்பக வல்லி)

நீயிந்த வேளை தன்னில் சேயன் எனை மறந்தால்
நானிந்த நானிலத்தில் நாடுதல் யாரிடமோ
ஏனிந்த மௌனமம்மா ஏழை எனக் கருளாய்
ஆனந்த பைரவியே ஆதரித் தாளுமம்மா
(கற்பக வல்லி)

எல்லோர்க்கும் இன்பங்கள் எழிலாய் இரங்கி என்றும்
நல்லாசி வைத்திடும் நாயகியே - நித்ய
கல்யாணியே கபாலி காதல் புரியும் அந்த
உல்லாசியே உமா உனை நம்பினேனம்மா
(கற்பக வல்லி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகேஸ்வரி நீயே நம்பிடும் எனைக் காப்பாய்
வாகீஸ்வரி மாயே வாராயிது தருணம்
பாகே ஸ்ரீ தாயே பார்வதியே இந்த
லோகேஸ் வரிநீயே உலகினில் துணையம்மா 7/82

(கற்பக வல்லி)

அஞ்சன மையிடும் அம்பிகை எம்பிரான்
கொஞ்சிக் குலாவிடும் வஞ்சியே உன்னிடம்
தஞ்சம் என அடைந்தேன் தாயே உன் சேய் நான்
ரஞ்சனியே ரஷிப்பாய் கெஞ்சுறேன் அம்மா

(கற்பக வல்லி)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம் மலரானது (4.12.2005) ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெற்ற இந்து மன்ற ஆரம்ப விழாவின் போது மன்ற ஸ்தாபகர் அவர்களால் அன்பளிப்பாக வழங்கப்படுகின்றது.

04/12/2005

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நியூ அருன் பிரிண்டர்ஸ், சங்கத்தானை, சாவகச்சேரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org